செ. கு. எண்: 149 நாள்: 12.12.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.ஓ.பன்னீர்செல்வம்** அவர்களின்
அறிக்கை - 12.12.2016

'வர்தா' புயல் வங்கக் கடலில் நிலைகொண்டிருப்பதாகவும் இது சென்னை அருகே கரையைக் கடக்கக் கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் 10.12.2016 அன்று வெளியிட்ட அறிவிப்பினை தொடர்ந்து புயல் தாக்கம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டேன். அதனடிப்படையில், வட கடலோர மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பல்வேறு துறைத் தலைவர்கள் புயல் வெள்ளம் ஆகியவற்றை சமாளிப்பதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை துவக்கினர்.

11.12.2016 அன்று நிவாரண ஆணையர் அலுவலகத்தில் உள்ள மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் பல்வேறு துறைகளுடனான ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். 'வர்தா' புயல் நிலவரம் பற்றி நேற்று முதல் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விவரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

'வர்தா' புயல் வட தமிழகத்தில் கரையைக் கடக்கக் கூடும் என்று இந்திய வானிலை மையம் அறிவித்ததைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்ட நிர்வாகங்கள் முழுமையான ஆயத்த நிலையில் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தில் நேற்று (11.12.2016) முற்பகல், மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஊடகங்கள் மூலம் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டனர். புயலினால் ஏற்படும் சேதங்களை குறைக்கும் பொருட்டும், இடர்ப்பாடுகளை தணிக்கும் பொருட்டும், மாவட்டங்களில் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் கூடுதலாக மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 6 அதிகாரிகள், திருவள்ளூர் மாவட்டத்திற்கு 6 அதிகாரிகள் மற்றும் விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி என நியமிக்கப்பட்டு அவர்கள் இம்மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் 16 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேசிய பேரிடர் மீட்புப் படையை சேர்ந்த 6 குழுக்கள் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

நேற்று (11.12.2016) மாலை எனது தலைமையில் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 'வர்தா புயல்' தொடர்பாக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டதுடன், அரசின் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து நான் அறிவுரை வழங்கினேன். இந்திய ராணுவம் உள்ளிட்ட மத்தியப் படைகள் தயார் நிலையில் இருக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

'வர்தா' புயல் இன்று (12.12.2016) மதியம் சென்னை அருகில் கரையைக் கடக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததையடுத்து, தாழ்வான பகுதிகளில் இருந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, புயல் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். சென்னை மாவட்டத்தில் 26, திருவள்ளூர் மாவட்டத்தில் 31, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 40 என மொத்தம் 97 முகாம்களில் 10,432 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டதுடன், சுகாதாரமான

உணவு, பாதுகாப்பான குடிநீர் ஆகியவை வழங்கப்படுகின்றன. மேலும், பாய், போர்வை ஆகியவைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இன்று (12.12.2016) காலை தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளுடன் ஆய்வு நடத்திய நான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் புயல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அரசு உயர் அதிகாரிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமைகளை உன்னிப்பாக கண்காணித்து வந்தேன்.

'வர்தா' புயல் சென்னை துறைமுகம் அருகில் கரையைக் கடக்கும் போது சுமார் 130 கி.மீ. வேகத்தில் காற்று வீசியதின் காரணமாக பல்வேறு இடங்களில் மின்சார சேவை பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நாடு மின்வாரியம் மூலம் 4,000 களப் பணியாளர்கள் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பல இடங்களில் மின் விநியோகம் விரைவில் சீரமைக்கப்பட்டு விடும் எனினும், வட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இவைகள் முழுவதுமாக சீரமைக்க ஒன்றிரண்டு தினங்கள் ஆகும். அது வரை குடிநீர் ஆகியவை வழங்க தேவையான ஜெனரேட்டர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன .

புயல் காரணமாக ஏற்படக் கூடிய நோய்களை தடுக்கும் விதமாக 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 50 தொற்றுநோய் தடுப்புக் குழுக்களும், 50 உணவு பாதுகாப்பு குழுக்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் 113 ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

'வர்தா' புயல் சென்னை அருகில் கரையைக் கடந்ததன் காரணமாக 4,000-க்கும் மேற்பட்ட மரங்கள் வேருடன் சாய்ந்து சாலைகளில் விழுந்துள்ளன. சாலைகளில் விழுந்துள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்த 275 மின் ரம்பங்கள் மற்றும் 100-க்கும் மேற்பட்ட JCB இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பொறியாளர்கள், சாலை ஆய்வாளர் உள்ளிட்ட 8,400 பணியாளர்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 1,100 மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, சாலைப் போக்குவரத்து சீர்செய்யப்பட்டு வருகிறது.

புயல், வெள்ள நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்க, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு தலா 6 அமைச்சர்களை நான் அனுப்பி வைத்துள்ளேன்.

'வர்தா' புயல் காரணமாக மூன்று பேர் உயிர் இழந்துள்ளனர். உயரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஓ.பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**